APRIL/MAY 2024

CLT10/FLT10 — தமிழ் – I

Time : Three hours Maximum : 75 marks

SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE LIBRARY

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொற்களில் விடை தருக.

1. பாரதியாரின் முப்பெரும் பாடல்கள் யாவை

2. உவமைக்கவிஞர் என்றழைக்கப்படுபவர் யார்?

3. 'சொல்லின் செல்வர்' – என்று போற்றப்படுபவர் யார்?

4. பழங்காலத்து பெண்கள் அணியும் காதணிகள் இரண்டினை குறிப்பிடுக.

5. 'தமிழ்நாட்டின் பெர்னாட்ஷா' என்றழைக்கப்படுபவர் யார்?

6. 'நாடகச் செல்வம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?

7. கரிசல் இலக்கியத்தின் தந்தை யார்?

8. 'சேலத்தார் வண்டி' சிறுகதையின் ஆசிரியர் யார்?

9. பெயர்சொற்களின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

10. மேல்வாயை நாக்கின் நுனி தடவுவதால் ———— பிறக்கும்.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பாரத ஜனங்களின் தற்கால நிலைமைகளை எவ்வாறு விவரித்துள்ளார்?

(அல்லது)

(ஆ) மனிதன் எதை நினைத்து பெருமைக்கொள்கிறான் என்று அப்துல் ரஹ்மான் குறிப்பிடுகின்றார்?

12. (அ) நன்மை, தீமை வைராக்கியம் குறித்து ரா.பி. சேதுப்பிள்ளை கூறும் செய்திகளை குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) பழங்காலத்து அணிகலன்கள் தற்போது நவீன அணிகலன்களாக மாறிய விதத்தை விளக்குக.

13. (அ) வங்காளத்து இளைஞர்களுக்கும், அசாம் குடும்பத்தார்க்கும் இடையே நடந்த மோதல்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) கொல்லிமலைத் தலைவன் ஓரியின் சிறப்புகளை விளக்குக.

14. (அ) 'நாற்காலி' சிறுகதை உணர்த்தும் சமூகச் சிந்தனையை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'சேலத்தார் வண்டி' கதைக் கருவை விளக்குக.

15. (அ) ர, ற வேறுபாடுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பிறமொழி சொல்லை நீக்கித் தமிழ்ச்சொல்லை எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழின் இனிமையைப் பிறபொருள்களின் இனிமையோடு பாரதிதாசன் கூறியுள்ள பாங்கினை விவரிக்க.

17. அறிஞர் அண்ணாவின் பாரதம் நாடகம் உணர்த்தும் உண்மை நிகழ்வை புலப்படுத்துக.

18. பழங்காலத்து ஆண்கள் பெண்கள் அணியும் அணிகலன்களாக ஆசிரியர் குறிப்பிடுவதை விளக்குக.

19. 'நாற்காலி' சிறுகதை உணர்த்தும் சமூகத்தின் நிலைப்பாடுகளை விளக்கி எழுதுக.

20. பெயர்ச்சொல் என்றால் என்ன? அதன் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

———————